**UNDELIVERED ISSUES**

Please re-address all undelivered issues of the Morning Star to:-
The Manager, "Morning Star", Vaddukoddai.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB/59/300/26/82*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 144 JAFFNA, FRIDAY, 21st & 28th SEPTEMBER, 1984 No. 38 & 39

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

***Subscription***

Inland: Rs. 50/- per year.

FOR ADVERTISEMENTS

*Apply to:*
The Manager, 'Morning Star', Vaddukoddai.


## Women in the News

*Miss Christine Revathy Sinniah*, Secretary, Maharajah Investments Ltd., has been selected by the Sri Lanka Association of Personal Secretaries to attend the Sixth Congress of Secretaries in Asia that is meeting at the Taj Mahal Hotel, Bombay early next month [September 30 to October 5].

This is the first time the Sri Lanka Association of Personal Secretaries has been invited to send a delegation to represent Sri Lanka at the Congress and *Revathy* is the only Tamil member of the delegation. This Congress will focus attention on the environment systems and individual with a view to helping the Personal Secretary meet the corporate challenges of the Eighties and beyond.

Revathy is the elder daughter of Mr A. I. Sinniah, Jaffna College, Vaddukoddai and of Mrs. Sinniah.

*Miss Suthanthira Thuraisingam*, the first girl in the Jaffna Diocese of the CSI to have obtained a Degree in Theology has been appointed Chaplain of Uduvil Girls College (her *alma mater*) and also Worker in charge of the Inuvil church. She came out top of her final year class at the Tamil Nadu Theological College at Madurai and passed her BD with a good Second class.

She is a daughter of Mr. Samuel Thuraisingam, Principal Atchuvely Christian College and Mrs Thuraisingham of Uduvil.

### Vembadi Girls' College

Two girls have gained entrance to the Engineering Faculty of the University, on the results of the August Examination of 1983, from the Jaffna District. Both of them are from Vembadi Girls College, Jaffna.

*Twenty five* students from Vembadi have gained entrance to the University, seven of them to the Faculty of Medicine.

### Hartley College, Pt. Pedro

*Fifty four* candidates have obtained admission to the University from Hartley College on the results of the August, 1983 AL Examination. *Sixteen* students gained admission to the Engineering Faculty. One of these students, Tharmarajah Kuharajah obtained an aggregate of 365 marks and has been placed first. In 1981, Hartley created a similar record when K. Ramakrishnan obtained 360 marks and was placed first among the entrants to the Engineering Faculty.

## Refugee Rehabilitation

There are now 350 families in the six camps at Kilinochchi In Colombo, there are 350 families.

According to Mr N. Jeganathan, the Government Agent at Kilinochchi some 300 families will be settled round the areas adjoining Akkarayan Kulam and another 300 round the areas adjoining Vannerikulam and another 100 families round Thevankulam. Each family would get one acre of cullivable land and one and a half acres of highland. A sum of Rs. 1500 will be given to each family for the construction of temporary huts.

This Scheme it is hoped will begin to operate from 10-10-84.

Permits will be issued for citizens of the country for getting the lands and permission will be granted in writing to non citizens for cultivating the lands on which they are settled.

### Church Outreach

The Evangelistic Centre of the JDCSI at *Sathiapuram* at Uduvil (formerly known as Malvam) has received an accession of strength with the opening of a new building costing Rs. 115,000 which was dedicated on Saturday 22-9-84 by the Bishop, the Rt. Rev. D. J. Ambalavanar. A regular Nursery, and Children's Day Care Centre, free medical clinics and sewing classes for girls will be among the amenities provided at this centre. Mrs. Ramani Thambiappah is in charge of the centre which is under the Evangelistic Board of the Diocese with Revs. Manopavan as the Evangelistic Officer.

It is hoped that soon *Sathiapuram* will develop into an independent congregation of the Diocese.

*Study of Egg Production*

### Agrarian Research and Training Institute

With the annual production of only *525 million eggs*, the consumption of eggs in Sri Lanka is low according to a Study made by the Agricultural Training and Research Institute of Sri Lanka. A person has to eat 180 eggs a year to maintain the minimum protein content in his diet. An egg contains 13 grams of high quality protein and just half of this satisfies the daily protein requirement.

In U. K, egg consumption is as high as 270 eggs a year per person. In Sri Lanka it is as low as 24 eggs a year per person on an average.

Rural folk who constitute 80 per cent of the Sri Lankan population obtain their protein needs from dry fish which is now more costly than eggs

One glaring defect in our poultry development policies is, according to the study, the total absence of a "market development stratigy".


**Jaffna Christian Union**

**SEVENTYFIFTH ANNIVERSARY**

Thanksgiving Service and Public Meeting

on

Advent Saturday (1-12-84)

Fellowship Lunch too — Please keep the date free.

CHRISTIAN INSTITUTE FOR THE STUDY OF RELIGION AND SOCIETY

**A WORKSHOP ON WORSHIP**

will be conducted

by

**Mrs. S. J. Somasundaram**

on

Tuesday, 23rd October, 1984
at 9 a m.

At the Ashram Maruthanamadam,

The Programme will conclude with Lunch

All are cordially invited.

**S. S. Arulampalam**
Director, C. I. S. R. S.


### IN MEMORIAM

**Ethel Gnanasothy Thambiah**

IN EVER LOVING MEMORY OF OUR DEAREST SISTER, ON HER BIRTHDAY

Born:- 10th October, 1919
Home Call:- 4th August, 1982

*Though absent from the body*
*You are present with the Lord,*
*Beholding your Redeemer*
*The Christ whom you adored.*

*With deep gratitude to God for her Selfless service and noble ways.*

Affectionately remembered by her loved ones:-
Emma, San, Lizzie and Meena

22/1, Kachcheri Lane,
Chundikuli.

### IN MEMORIAM

IN TREASURED MEMORY OF

**Dr. (Mrs.) Aurelia Paul**

Called to eternal rest on 14th September 1984

*When twilight deepens and the light fades from the crimson sky*
*Golden memories keep flitting back as each day go fleeting bye*
*While the past becomes the present in the magic of the night*
*Your absence is deeply felt when I pray at candlelight.*

Fondly remembered with love and gratitude by your nephew Eddy Paul.

"Royston"
Mutwal/Col.-15.

*IN BRIEF*

O *To commemorate DS anniversary:* The Ministry of Education has instructed all the principals of the schools to make arrangements to commemorate the 100th birth anniversary of the late premier D. S. Senanayake which falls on *October 20.*

### IN MEMORIAM

IN EVERLOVING MEMORY OF

**Mylvaganam Moses Muttu**

Born on: 20-3-1883
Called to Rest on: 9-10-1972

"*The Eternal God is Thy refuge and underneath are His everlasting arms*" *Deut: 33:27*

Affectionately remembered by his children Grand children and Great grand children.

Imyanan,
Uduppiddy.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 144 ] 21, 28 – 9 – 1984 [ இதழ் 38, 39


'இனி யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை; அடிமையென்றும் உரிமைக் குடிமகனென்றும் இல்லை; ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை; கிறிஸ்து இயேசுவுக்குள் நீங்கள் அனைவரும் ஒருவரே'.

கலாத்தியர் 3 : 28

தென் இந்திய திருச்சபையின் 37ஆம் ஆண்டு நிறைவை இம்மாதம் 27ஆம் நாள் நாம் கொண்டாடும்போது, இத்திருச்சபை தோன்றிய அம்மாபெரும் நிகழ்ச்சியை நினைவு கூருவோம்; திருச்சபையின் ஒருமைப்பாட்டிற்காக அயராது உழைத்த நம் முன்னோடிகளையும், 'ஒரே திருச்சபை — ஒரே உலகம்' என்ற காட்சியைக் கண்டு, அதனை எங்களிடம் அவர்கள் கையளித்ததையும் நினைவுகூருவோம்.

திருச்சபையின் பரந்த ஒருமைப்பாட்டை நாடுவதற்காகவும், ஒரே மானிட சமுதாயத்தை நிறுவுவதற்காகவும், நாங்கள் எடுத்த உறுதிப்பாட்டை இந்நாளில் புதுப்பிக்க வேண்டியது நமது கடமை. திருச்சபை இயேசுபெருமானால் வரவழைத்துத் திரட்டப்பட்ட சமுதாயம். ஒரு குறிப்பிட்ட வகையில், இறைவனால் திரட்டிச் சேர்க்கப்பட்ட பெருஞ்சமுதாயத்தின் ஒரு பகுதியே நாங்கள். இறைவன் இன்னும் தொடர்ந்து மக்களை ஒன்றாகத் திரட்டிச் சேர்த்து வருகிறார்.

இறைவனால் தொடக்கப்பட்டு, இயேசுகிறிஸ்துவின் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட இம்மாபெரும் இயக்கத்தில் நாங்கள் இருக்கிறோம். நாங்கள் செயற்பட்டு முன்னேற வேண்டுமென்பதே இறைவனின் திருவுளச்சித்தமாகும். கடந்த காலத்தைப் புகழ்ந்து கொண்டு, எவ்விதத்திலும் இயங்காதிருக்கும் சமுதாயமாக நாம் இருக்கப்படாது. திருச்சபையிலும் தேசத்திலும் உள்ள பிரிவினைச் சக்திகளுக்கெதிராகத் தூய ஆவியின் துணையுடன் போராடவேண்டும். பிரிவினைகளை ஒன்றுபடுத்தி ஒப்புரவாக்கும் இறைவனின் இயக்கத்தில் ஆக்கபூர்வமாக நாம் ஈடுபடல்வேண்டும்.

இறைவனால் ஒன்றுசேர்க்கப்பட்ட மக்களாகிய நாம், இறைவனின் இணைப்பிலிருந்து நம்மைத் தனித்தனிமையாகக் கணிக்க முயலுவது தவறு. இறைவனின் நோக்கில் எவரும் அன்னியனாகத் தென்படுவதில்லை. தள்ளப்பட்ட இனமாக ஒருவரையும் நோக்குவதில்லை. அனைவரும் இறைவனால் படைக்கப்பட்டவர்கள். எல்லோரும் அவருக்குச் சமம்.

ஆகவே, இறைமைந்தன் இயேசுவினூடாக நாம் நிகழ்வுகளையும் மக்களையும் நோக்குவதே மேல். திரியேகக் கடவுளுடன் எங்களை ஒன்றாகச் சேர்க்கும் தூயஆவி, மனிதனால் அமைக்கப்பட்ட தடைகளை நாம் மேற்கொள்ள, தொடர்ந்து எமக்கு உதவியருளுவார்.

உண்மையை அன்பினால் பேசவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இறைவன் எங்கள்மீது வைத்துள்ள அன்பு சிலுவையின் அளப்பரிய அன்பினாலேயே அளக்க முடியும் இவ்வன்புதான் நமது இதயங்களில் தூய ஆவியினூடாக ஊற்றப்பட்டது. இதனையே நாம் நமது ஞானஸ்நானத்தில் அறிக்கை செய்கிறோம்.

இந்த அன்புதான் எங்கள் ஐக்கியத்தின் அடிப்படை. இதனை எங்கள் தனி வாழ்விலும் சபை வாழ்விலும் செயல்படுத்த வேண்டும்; இல்லையெனில், நாங்கள் வழங்கும் அருளுரை சத்தமிடும் வெண்கலம் போலத்தான் இருக்கும். கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பதற்கு வேண்டிய ஆர்வமும் ஆற்றலும், திருச்சபை வாழ்வில் காணப்படமாட்டாது. இதைப்பற்றி ஆழமாய்ச் சிந்தியுங்கள்.

நாங்கள் ஒருவரோடொருவர் வைக்கும் தொடர்புகளில் எங்கு முறிவுகள் உளதென்றும், இறையன்பிற்கு எதிராக ஏதாவதை நாம் தெரிந்தும் தெரியாமலும் செய்கிறோமா வென்றும் ஆராயும்படி, ஞானஸ்நானம் பெற்றவர்களும், சபையின் விசேட ஊழியங்களில் ஈடுபட்டிருப்போரையும் அழைக்கிறோம். நாம் திருச்சபையின் வாழ்வில், ஐக்கியத்தின் புனிதத்தமாவாய் செயல்படுகிறோமா? எனச் சிந்தியுங்கள்.

எல்லாம் வல்ல இறைவன் கருணையுடன் நமக்களித்த அன்பின் கனிகளை நாம் நாடாவிடில் சபை ஐக்கியத்தின் மூலாதாரம் அதிகமாகப் பாதிக்கப்படுமென அறியுங்கள். தென் இந்திய திருச்சபை தொடங்கிய 37ஆம் ஆண்டு நிறைவை நன்றியுடன் நினைவுகூரும் இந்நாட்களில், எங்கள் வாழ்க்கை புதுப்பிக்கப்பட்டு, அதனால் திருச்சபையில் அதிகமான அமைதியும் நெருங்கிய உறவும் நிறைந்த வாழ்வும் ஏற்படவேண்டுமென இறைவனை இறைஞ்சுவோமாக.

பேரருள்மிகு ஐ. இயேசுதாசன்
தலைமைப் பேராயர்

## செய்திகள்

● முல்லைத்தீவு: முல்லைத்தீவிலுள்ள மகாவித்தியாலயமும், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியும் கால வரையின்றி மூடப்பட்டன. இவ்விரு பாடசாலைகளும் தற்போது தற்காலிக இராணுவ முகாம்களாக மாறியுள்ளன.

● புங்குடுதீவு: யாழ் - கல்வித் திணைக்களத்தில் பணியாற்றிய வட்டாரக் கல்வியதிகாரி திரு. சி. இராசநாயகம், தமது சேவையினின்று 14-9-84 இல் ஓய்வு பெற்றுள்ளார். இவர் முனைவர், சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் வட்டாரக் கல்வியதிகாரியாகவும், புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலையின் அதிபராகவும் பணியாற்றியவர்.

● யாழ்ப்பாணம்: யாழ். பொது நூலகத்தில் இருவாரங்களுக்குள் தனித்தனியாக இருந்து படிக்கக் கூடிய வசதியுள்ள படிப்பு அறைகள் அமைப்பதென்று, யாழ். பொதுநூலக அபிவிருத்திபற்றி நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

● சுண்டிக்குளி: கொழும்பு பாட்டா கம்பனியாரின் ஆதரவில் சமீபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அகில இலங்கை பாடசாலைகளின் சிறந்த கிரிக்கட் கோஷ்டியாகத் தெரிவு செய்யப்பட்ட யாழ். பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டிக்கு வெற்றிக்கிண்ணமும், கோஷ்டியில் பங்குபற்றிய வீரர்களுக்குத் தராதரப் பத்திரங்களும், பாட்டா பாத அணிகளும் பரிசில்களாக வழங்கப்பட்டன.

● புதுடில்லி: "இந்துமாகடலில் தற்போது ஏற்பட்ட நிலையாலும், இந்தியாவின் அண்டை நாடுகள் சிலவற்றில் நவீன ஆயுதங்கள் குவிக்கப்படுவதாலும் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகியுள்ளது. ஆகவே, இந்தியா எதற்கும் ஆயத்தமாயிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது" என்று இந்தியப் பிரதமர் கடற்படையினருக்குச் சமீபத்தில் தெரிவித்தார்.

---

## இயேசு வருகிறார்

கழுதைமேலே பவனி வரும் யேசுராசனை
களிப்புடனே பாடிடவே ஓடி வாருங்கள்
ஓடிவாருங்கள் ஓசன்னா பாடி வாருங்கள்
பாடிவாருங்கள் ஓசன்னா பாடி வாருங்கள். 1

வாக்குத்தத்தம் நிறைவு செய்ய வள்ளல்
வருகிறார்
போக்குச் செல்லும் மனிதனைத் தேடி
வருகிறார்
மாய்க்கும் சாவை வெல்ல என்று மன்னர்
வருகிறார்
மனுக்குலத்தின் மீட்பனாக யேசு வருகிறார்.
— ஓடிவாருங்கள். 2

தாவீதின் வம்சமதில் யேசு வருகிறார்
தர்மம் இங்கு நிலைக்க வென்று யேசு
வருகிறார்
பொய்மை அகலவென்று யேசு பவனி
வருகிறார்
புதிய அரசை நிறுவவென்று யேசுவருகிறார்
— ஓடிவாருங்கள். 3

பாலர் துதியில் யேசுராசன் பவனி
வருகிறார்
பரவசத்தில் பாடல் முழங்க யேசு வருகிறார்
நலிந்த மக்கள் வாழ்வுக்காக யேசு
வருகிறார்
நசரேயனாக யேசு பவனி வருகிறார்.
— ஓடிவாருங்கள். 4

புதிய ஆட்சி செய்ய என்று யேசுவருகிறார்
புனிதராக மாற்றவென்று யேசுவருகிறார்
பணிபுரிய என்று யேசு பவனி வருகிறார்
பாவம் போக்க சிலுவை சுமக்க யேசு
வருகிறார்.
— ஓடிவாருங்கள் 5

பா. கிரான்ஜீவன்.

## என் அயலான் யார்?

என் அயலான் யார் என்று ஒரு ஆளுநன் இயேசுவிடம் கேட்டான். இதை நாமும் பலமுறை கேட்கிறோம். நமக்கு அடுத்தவன் நம் அயலான்; அவனில் கிறிஸ்து மறைந்திருக்கிறார் என்பதைச் சாதாரணமாக நாம் கண்டு கொள்வதில்லை.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தபோது நடந்த ஒரு நிகழ்ச்சி என் மனதைக் கவர்வது உண்டு. அவரைச் சந்தித்தவர்கள் — பரியாள், இரண்டு சீடர், அறையில் கூடியிருந்த பதினொருவர் தோமா உட்பட — எவரும் அவரை முதலில் யாரென்று அடையாளம் கண்டுகொள்ளவில்லை. ஒரு கணம் அவரை வேறு எவரோ, எதுவோ என்றே கருதி அஞ்சினார்கள். பின்னால்தான், அவர் இயேசு எனக் கண்டு அவரைத் தொழுதுகொண்டார்கள்.

இப்படி நாம் சாதாரணமாகப் பழகும் மக்கள் நடுவில், இயேசு மறைந்திருப்பதை நாம் உடனாகக் காண்பது கிடையாது. அதனால் அவர்களை நமது அயலார் என்று ஏற்றுக்கொள்ள அஞ்சுகிறோம்.

நம்முடன் பசியால் வாடுகிறவர் இருக்கிறார்கள். அது உணவுக்காக உண்டான பசியாக இருக்கலாம் அல்லது அறிவுக்காகவும், அன்புக்காகவும், ஆத்ம சாந்திக்காகவும் உண்டான பசியாக இருக்கலாம், இவர்களுக்கு நாம் செய்வது யாது.

நம்முடன் உடை இல்லாது வருந்துகிறவர் இருக்கிறார்கள். இவர்களில் குளிருக்கும், வெயிலுக்கும் பாதுகாப்பளிக்கும் உடை வேண்டுகிறவர் உண்டு, மற்றொரு வகுப்பினருக்குப் பட்டும், செல்வமும் இருந்தும், ஆன்மாவைத் தாக்கும் சக்திகளிலிருந்து தமக்குப் பாதுகாப்புத் தேடிக் கொடுக்கும் ஆத்மீக ஆடை கிடையாது. இவர்களுக்கு நாம் கொடுக்கும் உதவி யாது?

நம்முடன் வியாதிப்பட்டோர் இருக்கிறார்கள், அது உடலை அடுத்த வியாதியாக இருக்கலாம். அதைவிடக் கொடிய வியாதிகளும் உண்டு. உதாரணமாக, மனத்தையும், உள்ளத்தையும், கவலைகளாலும், பாவப் பாரத்தாலும் கோரப்படுத்திவிட்டு வருந்துகிறவர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு நாம் செய்வது யாது?

இறுதியாக, நம்முடன் காவலில் அடைபட்டவர் இருக்கிறார்கள். இவர்களில் சிறைக் கம்பிகளுக்குப் பின் இருப்பவர் ஒரு விதம். மற்றொரு விதம், பாவச் சங்கிலிகளால் தங்களைத் தாங்களே பிணைத்துச் சிறைப்படுத்திக் கொண்டவர்கள்—பயம், சந்தேகம், பொய் முதலியவற்றால் வாழ்க்கையை இருள் நிறைந்த காடாக ஆக்கிக்கொண்டவர்கள் — இவர்களுக்கு நாம் செய்வது யாது?

'நான் பசியாயிருந்தேன்; உடை இல்லாதிருந்தேன்; வியாதிப்பட்டிருந்தேன்; காவலில் இருந்தேன் — அப்போதெல்லாம் நீ எனக்கு உதவினாய்' என்னும் பாராட்டை ஆண்டவர் கூறும் நாளில் நாம் அவருக்கு என்ன பதில் உரைப்போம்?

இந்தப் பாராட்டைப் பெறுவதற்கு ஆயத்தமாக நாம் காணும் அயலானிடம் அன்புகாட்டி அவனுக்கு உதவத் துரிதப்படுவோம். ஏனெனில், இவர்களில் ஒருவருக்குச் செய்யும் நன்மையை, நாம் நம் ஆண்டவருக்கே செய்கிறோம். அவர்தான் நம்மிடம் 'அயலானாக' வருகிறார்!

— J. J.

## பெண்கள் பகுதி:

### "விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன்" (சங். 116 : 10)

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனால் வழிநடத்தப்பட்டு கானானை நோக்கி செல்லுங் காலத்தில் எரிகோ என்னும் பட்டணத்தில் ஒரு வேசி வாழ்ந்து வந்தாள். அவள் பெயர் ராகாப் தன் வயிற்றுப் பிழைப்புக்காகவோ என்னவோ வேசியாக ஜீவித்து வாழ்ந்தாள். வேசியின் வாழ்க்கை ஒரு அசுத்தமான, அவலட்சணமான வாழ்க்கை. அவள் தான் துணிகரமான பாவம் செய்கிறது மின்றி, அநேகரை பாவத்துக்குட்படுத்துகிற பயங்கரமான நிலையில் உள்ளவள். ஆனால், இப்படிப்பட்ட பயங்கரமான பெண்ணை தன்னை நேசிக்கும் ஒரு பிள்ளையாக மாற்றியமைக்க சர்வத்தையும் படைத்தாளும் சர்வ வல்ல தேவன் சித்தங் கொண்டார். வேசியாக வாழ்ந்த அவளை விசுவாசியாக மாற்றினார்.

**அவள் தேவனுடைய வல்லமையை விசுவாசித்தாள்:**

தேவாதி தேவன் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களாகிய இஸ்ரவேல் ஜனங்களை சிவந்த சமுத்திரத்தை இரண்டாகப் பிளந்து வெட்டாந்தரையில் நடத்திக் கடக்கச் செய்த மகா வித்தையையும், அவர் தம் வல்லமையையும் அவள் கேள்விப்பட்டதோடுகூட, "அவரே உயர வானத்திலும், கீழ பூமியிலும் தேவனானவர்" என்பதையும் நிச்சயமாய் நம்பினாள், (யோசுவா 2 : 10 - 11). இதுவே அவள் தன் பட்டணத்து ஜனங்களோடுகூட அழிந்து போகாதபடிக்கு தேவனால் காக்கப்பட்டதின் மூதல் காரணம்.

இன்றும் அநேகம் பெண்கள், விஷேசமாக வாலிபப் பெண்கள் பலவித காரணங்களினால் பாவத்திற்கும், இச்சைக்கும் கீழ்ப்பட்டு செய்வதறியாது கலங்கித் தவிக்கிறார்கள். எனக்கும் ஓர் வாழ்வு உண்டா? நான் தற்கொலை செய்து மடியவேண்டியது தானா? என்று தவிக்கிறார்கள். விஷேமாக, சரியான பாதுகாவலின்றி தனிமையிலே வாழவேண்டிய நிலையிலே அநேக வாலிபப் பெண்கள் தங்களைக் கட்டுப்படுத்த இயலாமல் சில சந்தர்ப்பங்களில் உலகத்தின் இச்சைக்குத் தங்களை ஒப்புக் கொடுத்து தேவனுக்கும், அவர்களுக்கும் யாதொரு இணைப்புமின்றி தூரமாய் விலகி வாழ்கிறார்கள். பெற்றோராலும், மற்றோராலும் புரிந்து கொள்ளமுடியாத நிலையிலே, தேவனுக்கும் தூரமானவர்களாய் கலங்கித் தத்தளிக்கிறார்கள். அவ்விதமாய் சோர்வுற்ற நிலையில் வாழும் சகோதரியே! ராகாபினை மாற்ற எண்ணிய தேவன் உன்மேலும் அதே அன்புள்ளவராய், உன்னையும் தன்னுடைய பிள்ளையாக்க ஆவலுள்ளவராயிருக்கிறார்.

"நான் கர்த்தர், நான் மாறுதவர்" (மல்கி, 3 : 6) என்று வேதத்தில் அவரைக் குறித்து வாசிக்கிறோம்.

ராகாப், தேவன் தம்முடைய ஜனங்களை அற்புதமாய் நடத்திய வித்தையை விசுவாசித்தாள். ஆகவே அவருடைய பிள்ளைகளைத் தன் வீட்டில் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டாள். அதே விதமாய் கலங்கித் தவிக்கும் சகோதரியே! நீயும் இயேசுவுக்கு உன் இருதயக் கதவை திறந்து கொடு. அவர் உள்ளே பிரவேசிப்பார் (வெளி. 3 : 20).

சர்வத்தையும் படைத்த தேவாதி தேவன் உன் உள்ளத்திற்குள் வந்து நித்திய நித்தியமாய் தங்குவார். உன் பாவ அழுக்கைக் கழுவி உன் இருதயத்தை தூய்மையாக்குவார்! நீ புதிய சிருஷ்டியாவாய்! சமாதானமற்று வேதனையில் வாழும் உன் உள்ளம் தேவன் தரும் சமாதானத்தால் நிரம்பி வழியும். தேவன் உன் பரிதாப நிலையை மாற்றுவார். உன் வாழ்வை நல்வாழ்வாக்குவார்.

விபச்சாரத்தில் கையும் மெய்யுமாய் பிடிக்கப்பட்ட பெண்ணை "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை. நீ போ! இனி பாவஞ் செய்யாதே" என்றார் (யோவான் 8 : 11). நீயும் அவ்வித பரிதாப நிலையில் இருந்தால் இன்று உன்னையும் பார்த்து இயேசு அவ்விதமே கூறுகிறார். "இனி பாவஞ் செய்யாதே" அவருக்கு முழுவதுமாய் உன்னை ஒப்புக்கொடு.

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்". (1 யோவான் 1 : 9).

"நீங்கள் உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள்". (ரோமர் 6 : 13).

அவ்விதமாய் ஒப்புக் கொடுக்கும்பொழுது நம்முடைய ஜீவியம் தேவனுடைய வல்லமையால் முற்றிலுமாய் மாறுகிறது.

"ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" (2 கொரி. 5 : 17).

"அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்" (எபே. 2 : 1) என்ற வாக்கின்படியே உங்கள் ஜீவியத்தை மாற்றுவார்.

[தொடரும்]

---

## கிறிஸ்தவச் சான்றாண்மை

சான்றாண்மை என்பது சால்புடைய அல்லது பெருந்தகைமையான எல்லாப் பண்புகளையும் கொண்டிருக்கும் தன்மையாகும். சான்றாண்மை மிக்க ஒரு கிறிஸ்தவன் எவ்வாறு நடந்து கொள்ளுவான் தெரியுமா?

1. 'வெகு எளிதில் தன் பொறுமையை இழந்துவிட மாட்டான். கிறிஸ்தவ ஒழுக்கத்தின் அழகு அது!'

2. 'எரிச்சல் உண்டாக்கப்பட்டாலும் அழிவு செய்யும் பேச்சை அவன் பேசமாட்டான். கட்டுகின்ற நன்மொழியே பேசுவான்.'

3. 'பிறர்க்கு ஏற்பட்டுள்ள நல்வாழ்வைக் கண்டு நெஞ்சில் பொறாமை கொள்ளமாட்டான்.'

4. 'தான் வெகு முக்கியமானவன் என்று பிறர் அறிந்து கொள்ள முயற்சி செய்யமாட்டான்.'

5. 'தன் பக்கத்தில் நியாயம் இருந்தாலும், பிறர் தனக்குச் செய்யும் அநியாயத்தால் பதறமாட்டான்.'

6. 'பிறரில் உள்ள நல்ல காரியங்களைக் கண்டு மகிழ்வான். பாம்பைப்போல் வினா உள்ளவனாகவும் புறாவைப்போல் கபடற்றவனாகவும் இருப்பான்.'

7. 'பிறரிடமிருக்கும் தீய குணத்தைக் கண்டு பறைபடித்துக் கூறமாட்டான்.'

8. 'எல்லாவற்றிற்கும் மேலாக, தன் இருதயத்திலும் வாழ்க்கையிலும் கிறிஸ்துவின் அன்பையே வெளிப்படுத்துவான்.

— A. J.

---

## சொல்லும் பொருளும்:

### அச்சாரம்

அச்சாரம் என்ற சொல் பவுல் அப்போஸ்தலன் எழுதிய நிருபங்களில் மும்முறை வருகிறது (எபே. 1 : 14; 2 கொரி. 1 : 22; 5 : 5) இச்சொல் அறபோன் என்ற கிரேக்கச் சொல்லின் மொழி பெயர்ப்பு. ஆங்கில மொழி பெயர்ப்புக்களில் இச்சொல்லைக் குறிக்க நான்கு சொற்கள் பயன் படுத்தப்பட்டிருக்கின்றன. (earnest, pledge, instalment, guarantee). தமிழில் பிணை என்ற சொல்லும் ஒரு மொழி பெயர்ப்பில் காணப் படுகிறது.

கிரேக்கப் பண்டை நாள்களில் அறபோன் என்ற சொல் வணிகத்தில் கொடுக்கப்படும் முன் பணத்தைக் குறிக்கிறது. வாக்குக் கொடுத்தவாறு பொருள் வாங்கப்படாவிட்டால், கொடுக்கப்பட்ட முன்பணம் இழக்கப் படும். மேலும், முன்பணம் கொடுக்கப்பட்டிருந்தால், பாக்கித்தொகையும் பின்னால் கொடுக்கப்படும் என்ற உறுதியுண்டு. கீழே தரப்படும் மூன்று உதாரணங்கள் கிரேக்க நாள்களில் காணப்படுபவை. அவற்றில் இக் கருத்து அடங்கியிருப்பதைக் காண்க.

1. ஒரு பெண் தன் பசுவை முன்பணம் வாங்கிக்கொண்டு விற்றாள். பாக்கிப்பணம் பின்னால் கொடுக்கப்படும் என்பது ஒப்பந்தம்.

2. நடிகைகளில் சிலர் ஒரு திருவிழாவில் நடிக்கும்படி அமர்த்தப்பட்டனர். அவர்களுக்குரிய சம்பளத்தில் ஒரு பகுதி முன்பணமாகக் கொடுக்கப்பட்டது. பாக்கிப் பணம் உற்சவம் முடிந்த பின் கொடுக்கப்படும் என்பது ஒப்பந்தம்.

3. சுண்டெலியைப் பிடித்துக் கொடுப்பவனுக்கு முன்பணம் கொஞ்சம் கொடுக்கப்பட்டது. அவன் வேலை முடிந்தபின் முழுப் பணமும் கொடுக்கப்படும் என்பது ஒப்பந்தம்.

மேலே காட்டப்பட்ட உதாரணங்களிலிருந்து புதிய ஏற்பாட்டுக் காலத்தில அறபோன் என்ற சொல் ஏதாவதொரு ஒப்பந்தத்தில் கொடுக்கப்படும் பகுதிப் பணத்தைக் குறித்ததெனத் தெரிகிறது. அதுவுமன்றி, மீதிப்பணம் நிச்சயமாகக் கொடுக்கப்படும் என்ற உறுதியும் அதனால் உணர்த்தப்பட்டதெனவும் தெரிகிறது.

பவுல் அப்போஸ்தலன் பரிசுத்த ஆவியை விளக்கும் சொல்லாக அறபோன் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார். 'கடவுளுக்குச் சொந்தமானவர்கள் மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நமது சுதந்தரத்தின் அச்சாரம் (எபே. 1 : 14). இம்மையில் நமக்குக் கடவுளால் அருளப்படும் பரிசுத்த ஆவி பின்னால் கடவுள்முன் பெறப்போகும் நிறைவாழ்வுக்கு ஓர் அச்சாரமாகும்.

பவுல் அப்போஸ்தலன் ஒரு யூதர் கொண்டிருந்த கருத்துப்படி பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் கூறுகின்றார். அதாவது: (1) பரிசுத்த ஆவியின் மூலமாகத்தான் கடவுள் மனிதனோடு பேசினார். பரிசுத்த ஆவியால் ஆட்கொள்ளப்பட்டிருந்த தீர்க்கதரிசிகள் கடவுளின் செய்தியைச் சொன்னார்கள் (லூக். 2:25 பார்க்க); (2) ஒருவன் கடவுளின் வார்த்தையைக் கேட்கும்போது, அதன் உண்மையை உணரும் தன்மையைப் அவன் பெறச் செய்வது அவனுடைய இருதயத்திலுள்ள பரிசுத்த ஆவி என்பது. இவ்வாறாக, பரிசுத்த ஆவியானவர் ஒரே சமயத்தில் சத்தியத்தை வெளிப்படுத்துகிறவராகவும், கேட்கப்படும் செய்தியைச் சோதித்தறிய உதவும் உரைகல்லாகவும் விளங்குகிறார்.

மேற்கூறிய கருத்துக்களைக் கொண்டிருந்த பவுல் அப்போஸ்தலன் அறபோன் என்ற சொல்லால் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும்போது, அவர் உணர்த்துபவை: (1) இப்பொழுது மனிதனுக்குள்ள குறைவான அறிவு பின்னால் அவன் பெறப்போகும் பூரண அறிவின் ஒரு சிறு பகுதி; (2) கடவுள் இப்பொழுது மனிதனுக்கு வெளிப்படுத்தியிருக்கும் செய்தி பின்னால் அவர் நிச்சயமாய் முழுச் செய்தியையும் வெளிப்படுத்துவார் என்பதற்கு உறுதியளிக்கின்றது; (3) பரிசுத்த ஆவியால் ஒருவன் இம்மையில் பெறும் ஆனந்தம் பின்னால் அவன் பரலோகத்தில் பேரானந்தத்தை நிச்சயமாய் பெறுவான் என்பதற்கு அடையாளம் என்பன. 'இப்பொழுது கண்ணாடியில் நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம்.' அப்பொழுதோ முகமுகமாய்ப் பார்ப்போம். 'இப்பொழுது என் அறிவு குறைவுள்ளது. அப்பொழுதோ நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்வேன்' (1 கொரி. 13 : 12) என்று பவுல் அப்போஸ்தலன் கூறும் வாக்கியத்தில் இப்பொழுது உள்ளது பின்வரப்போவதற்கு உறுதியளிக்கிறது என்ற கருத்து அடங்கியிருப்பதைக் காண்க,

தமிழ் வழக்கிலுள்ள அச்சாரம் அல்லது அச்சாரம் என்ற சொல் தமிழ்ச் சொல்லன்று; தெலுங்கிலிருந்து வந்து வழங்கும் கொச்சைச் சொல், தொழிலிலும் வணிகத்திலும் கொடுக்கப்படும் முன்பணத்தைக் குறிக்கும் சொல் இது. எனினும், அறபோன் என்ற சொல்லால் பவுல் அப்போஸ்தலன் உணர்த்தும் பொருளை விளக்க இச்சொல் மிகவும் பொருத்தமானதே, பிணை என்ற சொல் பிணைகாரன் ஒருவன்பொருட்டுக் கொடுக்கும் பிணைப்பொருளைக் குறிக்கும். எனவே, அச்சொல் பிணைக்காரன் ஏற்கும் பொறுப்பை உணர்த்துமேயன்றி, பின் கொடுக்கப்போகும் பொருளை உணர்த்தாது.

D. R.

---

## செய்தி

● வாஷிங்டன்: "அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக புதிய, மேலதிக நிதி வசதிகள் திரட்டப்படும்" என்று உலக வங்கியின் தலைவர் திரு. அஷ்டன் கிளாசன் கடந்த வாரம் வாஷிங்டனில் நடைபெற்ற சர்வ தேச நாணய நிதி மாநாட்டில் உறுதி அளித்துள்ளார்.

## First Handy Perinpanayagam Memorial Lecture

(March 1983)

by

**Dr. Walter Bicknell**

Before beginning my formal lecture, I would like to make a few personal remarks, for I, too, remember Handy and remember him in his youth. As you may recall, when I left Jaffna in 1928, I was already fifteen (Handy was Twenty-nine) and had been introduced not only to the ways of Jaffna and come to love its fields palms and curries, but also to a people who were then in the early stages of a struggle for national independence. I was there, at Jaffna Colleges in 1927, when Gandhi spoke on the campus and later when he spoke in Jaffna town. I was there when Handy and Lyman Kulatungam and others began to wear national costume. And of course, Handy master, as you called him, was often at the Principal's bungalow arguing, discussing, or laughing over all sorts of questions, while I, an only child, sat at the table with adults at breakfast, luncheon, and dinner, listening. I don't think I was always quiet as the conversation turned from world politics, local politics, and a crowd of other issues. Thus I was exposed early to the words "nationalism", "satyagraha", and "civil disobedience". The words rang in my ears during my childhood and adolescence and ever since after I left Jaffna to get on with my education.

At length, in 1936, Evangeline and I were married, and as many of you know, came to Jaffna for the month of July. In that same month Handy organized a celebration of my father's Silver Jubilee, a reception we well remember. I can remember, too, that the conversation that Handy and I had broken off in 1928, began again. That summer we discussed individualism in the nineteenth century and related matters. After 1936 we corresponded very little. When we did write, we would say, "we must write more often", and Handy would say, "You must write an essay for *The Miscellany*", but somehow the letters and the articles didn't get written. However, our friendship never faded or withered.

To me, therefore, it is indeed an honour and a privilege to be chosen to be the first speaker in the Handy Perinpanayagam Memorial Lecture series you inaugurate today. In a way, it is perhaps appropriate that an American gives this address because it symbolizes that long association between New England and Jaffna since 1819 and reminds us of the cross-fertilization between certain American and Sri Lankan ideas that has characterized the educational and intellectual life of Jaffna, Hindu and Christian alike. America had been a colony and fought for independence, when my father and Handy were colleagues Sri Lanka (then Ceylon) was engaged in a struggle for liberation. It is not surprising that both of them agreed on certain basic principles. We know they did and none so much perhaps as the one uttered by George Washington which was recently quoted on an American postage stamp. That principle is: "To bigotry no sanction. To persecution no assistance". Handy, I am sure, lived by those words. It might well be said of Handy what the French author Anatole France said in his funeral oration over the body of Emile Zola, a courageous fighter for justice. France concluded with these words: "He was a moment on the conscience of man". I think we can say with equal truth that Handy Perinpanayagam was a moment in the conscience of Sri Lanka.

* * *

[The above are the Prefatory remarks made by *Dr. Walter Bicknell* (son of the late revered Principal, Rev. John Bicknell of Jaffna College, Vaddukoddai) at the First Handy Perinpanayagam Memorial Lecture he delivered on 22-3-83 at the Kokuvil Hindu College Hall, on the invitation of the "Handy Perinpanayagam Memorial Committee". The text of the Lecture which was received from Dr. Bicknell only recently will be published in these columns as a serial from time to time as space is available.]

— Editor.

### The Northern Front

O *Some 50 educationists* of the North have submitted a memorandum to the President urging the release of the northern detenus, many of whom are bread winners in their family. Veteran educationists of the North, Messrs K. Nesiah, Professor Emeritus, and Mr. Subramaniam (Orator), Principal Emeritus, together with Mr. S. Ponniah, Attorney at Law, President of the Jaffna Citizens Committee led a delegation to the acting Government Agent and handed over to him the memorandum to be forwarded A copy was handed over also to the Director of Education, NR.

### Karainagar Church

**Annappah — Thambiah**

*Jeyaseelan*, son of Mr. W. G. Annappah and Mrs Annappah of Manipay and *Thevajayanthi*, daughter of Mr Alfred and Thambiah and Mrs Thambiah of Karainagar were joined in holy matrimony at the Karainagar CSI Church on 6-9-84 at 4 p. m

Rev. A Jeyakumar, a brother of the bridegroom performed the nuptial ceremony. Rev. D R. Ambalavanar preached the homily.

*The Anglican Diocese (Colombo)*

### Christ Church Mutwal

The 21st of September, the Feast of Saint Mathew, marked the 130th Jubilee of the Consecration of *Christ Church, Mutwal* which was the Anglican Cathedral for 120 years (1854 – 1973).

It was consecrated by the first Bishop of Colombo, James Chapman in 1845, although the building was completed only nine years later.

For nearly 63 years, it was also the Chapel of St. Thomas College, which was later shifted to Mt Lavinia.

With the transfer of the Bishop's throne — the *Cathedra* to the New Cathedral Church of Christ, the Living Saviour at Bouddhaloka Mawatha, the Christ Church Mntwal has become a parish church

Ten out of the eleven Anglican Bishops were 'enthroned' at Christ Church, Mutwal.

*R. C. Church*

### Scholar and Educationist Remembered

*Father Peterpillai* was remembered on his 20th death Anniversary on 22-9-84.

Father Peterpillai as an Educationist campaigned for the teaching of Science subjects in English. He was also against Free Education but advocated the setting up of an elaborate Scholarship Scheme. He boldly stood out against the Schools "Take-over".

Though he did not succeed in his endeavours, he is hailed as an educationist who had a clear vision

Fr. Peterpillai was "the greatest social Apostle which God gave to Sri Lanka" said His Eminence Thomas Cardinal Cooray. The fruit of his labours are apparent today,

### Colleges of Education

The Ministry of Education hopes to establish Colleges of Edncation for those between the ages of 17 and 22 who wish to be appointed as teachers in government service after a three-year course.

Those with AL qualifications (3 Subjects or more) could apply. The course will be residential with a two year institutional study and a one year 'internship' in a school.

On completion of the course, a Teachers' Diploma will be awarded which will carry a Trained Teachers' Salary. The appointments will be on a district basis in one of the 17 districts listed which includes in the North, Jaffna, Vavuniya, Mullaitivu, Mannar and Kilinochi.

Selection will be on an Interview. The course is not open to married teachers or those already in service or those already selected and awaiting postings. The courses provided for, are: English. Science, Mathematics, Primary Education and Physical Education.

### Jaffna News in Brief

O *The freak weather* during the last week of September has again affected the Jaffna farmer's onion harvest. Only a few farmers who could afford the money for the high cost of seed-onions ventured on the short term cash crop which in normal times brings the farmer a tidy sum. But they have now been disillusioned. Onions which were sold at Rs. 20, a kilo has come down to Rs. 6.

O Violence of any major kind has not been reported since the last tragedy at Mannar-Road, Vavuniya. But civilian life is yet to reach any measure of normalcy. A "cease-fire" alone can prepare the ground for any kind of reconciliation.

O Absence of Development of any kind, has had far reaching economic immediate effects. Daily wage-earners are reduced to poverty when roads are not maintained, work on buildings is suspended and farmers go slow on cultivation.

O *Brigadier Nalin Seneviratne, the Co-ordinating Authority of the North* has, it is learnt, assured a delegation of mothers of youth detained at Boosa that the safety of their children will be ensured and they will be released after investigations are concluded. Only 68, out of the 300 detained are now in custody at Boosa.

**JAFFNA COLLEGE**

has pleasure in inviting you to its

**ANNUAL PRIZE-GIVING**

on

Saturday 20th October, 1984 at 9 30 a m.

**Mr. K. Pooranampillai,**

B. A. (Lond.) & Post Grad. Cert., Selly Oak, B'ham.
Formerly Principal of Hartley College, Point Pedro and St. John's College, Jaffna

will be the Chief Guest.

**Mrs. Pooranampillai**

will distribute the Prizes.

Vaddukoddai.
10-10-1984.

A. Kadirgamar,
Principal.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./59/300/26/82.*
Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 28th September 1984 and published by Mr. Alvappillai Rajasingham, 330, Navalar Road, Jaffna.